RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை மலர்-5 இதழ்- 34 பிப்ரவரி.10 2026 செவ்வாய்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ. 5

# தூய்மைப் பணியாளர்களுக்கு முதல்வரின் உணவுத் திட்டம் விரிவாக்கம்: ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

திருவள்ளூர்: பிப்.10-

மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் தூய்மைப் பணியாளர்களுக்கு முதல்வரின் உணவுத் திட்டம் விரிவாக்கத்தை இன்று காலை திருவள்ளூர் அருகே போளிவாக்கத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

தூய்மைப் பணியாளர்களுக்கு முதல்வரின் உணவுத் திட்டத்தை முதல் கட்டமாக பெருநகர சென்னை மாநகராட்சியில் கடந்த ஆண்டு நவம்பர் 15ம் தேதி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். அதன் தொடர்ச்சியாக, மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் தூய்மைப் பணியாளர்களுக்கான முதல்வரின் உணவுத் திட்டம் விரிவாக்கம் தொடக்க விழா மற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கான நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று காலை திருவள்ளூர் அருகே போளிவாக்கத்தில் நடைபெற்றது.

இதில், சிறப்பு விருந்தினராக முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று, ஆவடி மாநகராட்சி, திருவள்ளூர் நகராட்சி, திருமழிசை பேரூராட்சிகளில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு விநியோகம் செய்யும் வாகனங்களின் செயல்பாட்டை கொடியசைத்து தொடங்கி வைத்தும், தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கியும், மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் தூய்மைப் பணியாளர்களுக்கு முதல்வரின் உணவுத் திட்டம் விரிவாக்கத்தை தொடங்கி வைத்தார்.



இந்த திட்டம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி உள்ளிட்ட 25 மாநகராட்சிகள், 145 நகராட்சிகள், 479 பேரூராட்சிகளில் பணிபுரியும் 1, 29,689 தூய்மை பணியாளர்கள் பயன் பெற உள்ளனர். இத்திட்டத்துக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.213.92 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தூய்மை பணியாளர்களுக்கு அரசு சார்பில் உணவு வழங்கும் திட்டம், இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் முதல் முறையாக செயல்படுத்தப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து, முதல்வர் மு.க.ஸ்டாலின், தூய்மை பணியாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவி தொகை, பணியின் போது உயிரிழந்த தூய்மை பணியாளரின் குடும்பத்துக்கு நிவாரண உதவி தொகை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்த விழாவில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு. ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மதிவேந்தன, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர், தமிழக அரசின் தலைமை செயலாளர் முருகானந்தம், திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் பிரதாப், அரக்கோணம் எம்பி ஜெகத்ரட்சகன், எம் எல்ஏக்கள் வி.ஜி.ராஜேந்திரன், கிருஷ்ணசாமி, சந்திரன், டி.ஜெ.கோவிந்தராஜன், சுதர்சனம், துரை.சந்திரசேகர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## அனுமதி பெறாத கொடிக் கம்பங்கள் அகற்றக் கோரிய வழக்கு: 13 மாவட்ட ஆட்சியர்கள் பதிலளிக்க உத்தரவு

மதுரை: பிப்.10-

மதுரை உட்பட 13 மாவட்டங்களில் அனுமதி பெறாமல் வைக்கப்பட்டுள்ள கொடிக் கம்பங்கள், பிளக்ஸ் போர்டுகளை அகற்றக்கோரிய வழக்கில் 13 மாவட்ட ஆட்சியர்கள், காவல் கண்காணிப்பாளர்கள் பதிலளிக்க உயர் நீதிமன்றக் கிளை உத்தரவிட்டுள்ளது.



சிவகங்கை மாவட்டம் சாலி கிராமத்தை சேர்ந்த ராதா கிருஷ்ணன் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில்: "கன்னியாகுமரி, தூத்துக்குடி, நெல்லை, தென்காசி, விருதுநகர், மதுரை, தேனி, ராமநாதபுரம், திண்டுக்கல், கரூர், புதுக்கோட்டை, திருச்சி, மற்றும் தஞ்சாவூர் ஆகிய 13 தென் மாவட்டங்களில் ஏராளமான இடங்களில் அனுமதி பெறாமல் கொடிக் கம்பங்கள், பிளக்ஸ் பேனர்கள், போர்டுகள் வைக்கப்பட்டுள்ளன.

இந்த மாவட்டங்களில் அரசு புறம்போக்கு இடங்கள், மாநில நெடுஞ்சாலை, கிராமச் சாலைகள் மற்றும் பொது இடங்களில் அரசியல் மற்றும் சாதி அடிப்படையிலான பிளக்ஸ் போர்டுகள், போஸ்டர்கள் ஒட்டப்படுகின்றன. பேனர்கள் கட்டப்படுகின்றன. இவைகளால் தேவையற்ற மோதல்கள் ஏற்படுகிறது. தமிழ்நாடு உள்ளாட்சி விதிகளின்படி போஸ்டர்கள் ஒட்டவும், பேனர்கள், போர்டுகள் வைக்கவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அனுமதி பெற வேண்டும். அதன்படி எந்த அனுமதியும் பெறப்படுவதில்லை.

அனுமதி பெறாமல் செயல்படுபவர்கள் மீது அதிகாரிகளும் நடவடிக்கை எடுப்பதில்லை. எனவே, மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர் உள்ளிட்ட 13 மாவட்டங்களில் முறையாக அனுமதி பெறாமல் அரசியல் மற்றும் சாதிய அமைப்புகளின் கொடிக் கம்பங்கள், பிளக்ஸ் போர்டுகள், பேனர்கள் வைக்கப்பட்டது தொடர்பாக விசாரிக்கவும், அவற்றை அகற்றவும் உத்தரவிட வேண்டும்'' இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனுவை நீதிபதிகள் ஜி.ஜெயச்சந்திரன், கே.கே. ராமகிருஷ்ணன் அமர்வு இன்று விசாரித்தது. அப்போது நீதிபதிகள், அனுமதி பெறாத பிளக்ஸ் பேனர்கள், கட்சி கொடிக் கம்பங்களை அகற்றுவது தொடர்பாக பல்வேறு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இருப்பினும் தொடர்ந்து வழக்குகள் தாக்கலாகி வருகின்றன. மனு தொடர்பாக 13 மாவட்ட ஆட்சியர்கள், காவல் கண்காணிப்பாளர்கள் 4 வாரத்தில் பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டு வழக்கை ஒத்திவைத்தனர்.

## திருப்பரங்குன்றம் சிக்கந்தர் தர்காவில் பக்ரீத், ரம்ஜான் நாட்களில் மட்டும் தொழுகைக்கு அனுமதி: உச்ச நீதிமன்றம்

புதுடெல்லி: பிப்.10-

திருப்பரங்குன்றம் மலை மீது உள்ள தர்கா தொடர்பாக தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்கில், ரம்ஜான், பக்ரீத் ஆகிய பண்டிகை நாட்களில் மட்டும் தர்காவில் தொழுகை நடத்த அனுமதி என்ற உயர் நீதிமன்றத் தீர்ப்பை உச்ச நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.



திருப்பரங்குன்றம் மலை மீது உள்ள சிக்கந்தர் பாதுஷா அவுலியா தர்காவில் தொழுகை நடத்துவது மற்றும் பலியிடுவது தொடர்பான வழக்கில் கடந்த ஆண்டு ஜூன் மாதம் இரண்டு நீதிபதிகள் அடங்கிய அமர்வு தீர்ப்பளித்தது. அதில், நீதிபதி நிஷா பானு, முஸ்லிம்களின் உரிமைகளை உறுதிப்படுத்தி தீர்ப்பளித்தார்.

மற்றொரு நீதிபதியான எஸ். ஸ்ரீமதி, மாறுபட்ட தீர்ப்பை அளித்தார். ரம்ஜான், பக்ரீத் மற்றும் பிற இஸ்லாமிய பண்டிகைகளின்போது கந்தூரி பலியிடுவது மற்றும் தொழுகை நடத்துவது தொடர்பாக உரிமையியல் நீதிமன்றத்தை அணுக அறிவுறுத்தினார்.

மேலும், தர்காவில் தொழுகை நடத்துவது சமீபத்தில் தோன்றியது என்று கூறிய அவர், தொழுகைக்காக அதிக எண்ணிக்கையில் மக்கள் கூடுவது காசி விஸ்வநாதர் கோயிலுக்குச் செல்லும் பாதையைத் தடுக்கும் என்றும், அது அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தின் மற்ற பகுதிகளை ஆக்கிரமிக்கும் என்றும் கூறினார்.

இரு நீதிபதிகளும் இருவேறு தீர்ப்புகளை அளித்ததை அடுத்து, சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி இறுதித் தீர்ப்புக்காக இந்த வழக்கை மூன்றாவது நீதிபதிக்கு அனுப்பினார்.

வழக்கை விசாரித்த மூன்றாவது நீதிபதி, கடந்த ஆண்டு அக்டோபர் 10 அன்று அளித்த தீர்ப்பில், ரம்ஜான், பக்ரீத் பண்டிகைகளின்போது மட்டுமே தொழுகை நடத்த வரையறுக்கப்பட்ட உரிமைகள் உள்ளன என்று தீர்ப்பளித்தார். மேலும், குன்றில் பலியிடும் வழக்கம் குறித்து ஒரு தகுதிவாய்ந்த உரிமையியல் நீதிமன்றம் முடிவு செய்யும் வரை, எந்த ஒரு பலியிடுதல், சமைத்தல், அசைவ உணவைக் கொண்டு செல்வது, பரிமாறுவது ஆகியவற்றுக்கு தடை விதித்தார்.

இதனால், உயர் நீதிமன்ற உத்தரவை எதிர்த்து தர்காவில் வழிபடும் எம்.இமாம் உசேன் என்பவர் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு, நீதிபதிகள் அரவிந்த் குமார் மற்றும் பி.பி வரலே அமர்வு முன் விசாரணைக்கு வந்தது.

மனுதாரர் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன், ''தர்கா உள்ள நெல்லித்தோப்பு பகுதி நிலம் முஸ்லிம்களுக்குச் சொந்தமானது என்று கூறிய பிறகு, தொழுகை நடத்த கட்டுப்பாடு விதிப்பதா? தொழுகை நடத்துவதால் அந்த பகுதியில் சட்டம் ஒழுங்கு பிரச்சினை வந்தது கிடையாது'' என்று வாதிட்டார்.

அப்போது நீதிபதி அரவிந்த் குமார், சட்டம் ஒழுங்கு பிரச்சினை இருந்திருக்கவில்லை என்றால் அமைதிக் குழு கூட்டம் நடந்திருக்காது என்றும், உயர் நீதிமன்ற உத்தரவு சமநிலையான உத்தரவாகத் தெரிகிறது என்றும் கூறினார். மற்றொரு நீதிபதியான பி.பி.வரலே அதை ஒப்புக்கொண்டார்.

இதையடுத்து, ''இந்த உத்தரவில் நாங்கள் தலையிட விரும்பவில்லை. உயர் நீதிமன்ற உத்தரவு உறுதி செய்யப்படுகிறது'' என நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.

## பட்ஜெட் மீதான விவாதத்தில் நாங்கள் ஆர்வமாக உள்ளோம்; சொல்கிறார் ராகுல்

புதுடில்லி: பிப்.10-

பட்ஜெட் மீதான விவாதம் குறித்து அரசு கவலைப்படுகிறது, ஆனால் நாங்கள் விவாதத்தில் ஆர்வமாக உள்ளோம் என காங்கிரஸ் எம்பி ராகுல் தெரிவித்துள்ளார்.

பார்லிமென்ட் வளாகத்தில் நிருபர்களிடம் ராகுல் கூறியதாவது: பிரதமரை எம்.பிக்கள் மிரட்டுகிறார்கள் என்ற பேச்சுக்கே இடமில்லை. பிரதமரைத் தாக்கப் போவதாக யாராவது சொன்னால், உடனடியாக ஒரு எப்.ஐ.ஆர் போடுங்கள். அந்த நபரைக் கைது செய்யுங்கள். நீங்கள் ஏன் அப்படிச் செய்யவில்லை.

புத்தகத்தை...

பட்ஜெட் மீதான விவாதம் குறித்து அரசு கவலைப்படுகிறது, ஆனால் நாங்கள் விவாதத்தில் ஆர்வமாக உள்ளோம். சில நாட்களுக்கு முன்பு, நரவனே எழுதிய புத்தகத்தை மேற்கோள் காட்டி விவாதிக்க நான் விரும்பவில்லை, அதனால் அவையை மத்திய அரசு முடக்கியது. நான் பலமுறை பேச அனுமதிக்கப்படவில்லை. முதலில், ஒரு புத்தகத்தை மேற்கோள் காட்ட முடியாது என்று அவர்கள் சொன்னார்கள்.

பத்திரிகையை...

நான் ஒரு பத்திரிகையை மேற்கோள் காட்டுவதாகச் சொன்னபோது, ஒரு பத்திரிகையையும் மேற்கோள் காட்ட முடியாது என்று சொன்னார்கள். பின்னர் இந்த விவகாரம் குறித்து நான் பேசவே விரும்பவில்லை. பாதுகாப்பு அமைச்சரும் புத்தகம் வெளியிடப்படவில்லை என்று பொய்யாகக் கூறினார். உண்மையில், புத்தகம் வெளியிடப்பட்டுவிட்டது, அதன் நகல் எங்களிடம் உள்ளது. உண்மை மிகவும் தெளிவாக உள்ளது.

நிபந்தனைகள்

அமெரிக்க ஒப்பந்தம், அது செய்யப்பட்ட விதம், என்ன நடந்தது, நமது விவசாயிகள் மீதான தாக்கம் ஆகியவை விவாதிக்கப்படவிருப்பதால், பட்ஜெட்டில் விவாதம் நடத்துவது குறித்து அரசு கவலைப்படுவதாக நான் நினைக்கிறேன். முழு எதிர்க்கட்சியும், பார்லிமென்டில் விவாதம் நடத்த ஆர்வமாக இருக்கிறது. ஆனால் அது நடக்க வேண்டுமென்றால், அவர்களின் நிபந்தனைகளை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் அமெரிக்காவுடன் சமீபத்திய வர்த்தக ஒப்பந்தம் காரணமாக, மத்திய பட்ஜெட் குறித்து விவாதம் நடத்த அரசு விரும்பவில்லை. இவ்வாறு ராகுல் கூறினார்.

## "பிரதமர் மோடி மலேசியாவுக்கு சென்றால் தமிழை புகழ்ந்து பேசுவார்; ஆனால்..." அமைச்சர் ரகுபதி

சென்னை: பிப்.10-

"பிரதமர் மோடி மலேசியாவுக்கு சென்றால் தமிழை புகழ்ந்து பேசுவார், ஆனால் ஒடிசாவுக்கு சென்றால் தமிழர்களை திருடர்கள் என்பார்'' என அமைச்சர் ரகுபதி தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "பிரதமர் மோடி மலேசியாவுக்கு சென்றால் தமிழை புகழ்ந்து பேசுவார். ஏனென்றால் தமிழர்கள் அதிகளவில் மலேசியாவில் இருக்கிறார்கள். ஆனால் பிரதமர் ஒடிசாவுக்கு சென்றால் தமிழர்களை திருடர்கள் என்பார். பிஹாருக்கு சென்றாலும் தமிழனை திருடன் என்பார். ஆனால் அவர் வெளிநாட்டுக்கு சென்றால் தமிழர்கள் இணைப்பு பாலமாக இருப்பவர்கள் என்பார்.

தமிழகத்தில் கொண்டாடுவதை போல மலேசியாவிலும் தைப்பூசம் மிகச் சிறப்பாக கொண்டப்படுகிறது. அங்கே இருப்பவர்கள் மதம், இனம் பாராமல் அனைவரும் தமிழ் கடவுளாக முருகனை ஏற்றுக்கொண்டு விழாவை நடத்துகிறார்கள். இதையெல்லாம் பார்த்து தான் பிரதமர் மோடி இவ்வாறு பேசுகிறார்.

தமிழ் கடவுள் முருகனை வணங்குகின்றவர்களுக்கு திராவிட மாடல் குறித்து புரியும். தங்களுக்கு பாதுகாப்பு திராவிட மாடல் ஆட்சி தான் என உணர்ந்தவர்கள்தான் தமிழக முருக பக்தர்கள்.

அமெரிக்கா இந்தியா ஒப்பந்தத்தால் அமெரிக்காவுக்கு தான் நலனே தவிர, இந்தியாவுக்கு கிடையாது. ரஷ்யாவிடமிருந்து இந்தியா எண்ணெய் வாங்கினால் 50 டாலர் என்றால் அமெரிக்காவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்கினால் 55 டாலர். இதனால் அம்பானிக்கும் அதானிக்கும் தான் ஆதாயம். எந்த விஷயத்திலும் பிரதமர் மோடியின் இறுதி முடிவை பார்த்தால், அதானி அம்பானிக்கு மிகுந்த பொருளாதார வளத்தை பெருக்கி தரக்கூடியதாகவே இருக்கும்.

தவெகவுக்கு 42 சதவீதம் வாக்கு வங்கி இருப்பதாக செங்கோட்டையன் கூறுகிறார். செங்கோட்டையனுக்கு அரசியல் குறித்த புள்ளி விவரங்கள் தெரியாது. அவருக்கு மக்களின் மனதை அறியத் தெரியாது.

எடப்பாடி பழனிசாமி எப்பொழுதுமே கனவு கண்டு கொண்டிருப்பவர் என்பது நாடறிந்த உண்மை.

அன்புமணி ராமதாஸ் மருத்துவத்தை பற்றி ஏதாவது கூறியிருந்தால் பரவாயில்லை, அவர் பொருளாதார நிபுணரும் அல்ல; மேதையும் அல்ல. பொருளாதார முன்னேற்றத்தில் சிறப்பான இடத்தை கொடுத்திருக்கிறது தமிழக அரசு. தமிழகம் இந்திய பொருளாதாரத்தை உயர்த்தியிருக்கிறது.'' இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# கிழக்கு மாவட்ட திமுக சார்பில் வெல்லும் தமிழ் பெண்கள் ஆலோசனை கூட்டம்: மதியழகன் எம் எல் ஏ பங்கேற்பு



கிருஷ்ணகிரி, பிப்.10-

கிருஷ்ணகிரியில், கிழக்கு மாவட்ட திமுக சார்பில் நடந்த வெல்லும் தமிழ் பெண்கள் ஆலோசனை கூட்டத்தில் மாவட்ட செயலாளர் மதியழகன் எம்எல்ஏ., பங்கேற்று பேசினார். கிருஷ்ணகிரியில், கிழக்கு மாவட்ட திமுக பெண்கள் ஆலோசனை சார்பில் வெல்லும் தமிழ் கூட்டம் நேற்று நடந்தது. கூட்டத்திறகு மாவட்ட செயலாளர் மதியழகன் எம் எல்ஏ., தலைமை வகித்து பேசியதாவது: திமுக ஆட்சியில் பெண்களுக்காக எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப் பட்டுள்ளன. பள்ளியில் சேரும் பெண் குழந்தைகள் இடைநின்றல் இன்றி 10ம் வகுப்பு, கல்லூரி கல்வியை தொடர்வது உறுதி செய்யப்பட்டுள்ளது. பெண்குழந்தைகள் பள்ளிக் கல்வியில் 84 சதவீத கல்வியறிவை பெற்று முன்னேறி வருகிறார்கள். மேலும், கல்லூரி செல்லும் பெண்களின் விகிதம் 70 சதவீதத்தை தாண்டி உள்ளது. நான் முதல்வன் திட்டத்தில் பயிற்சி பெற்ற மாணவிகளில் 80 சதவீதத்திற்கும் மேல் தங்களுக்கு வேலை கிடைக்கும் என நம்பிக்கை தெரிவித்துள்ளனர். மக ளிர் உரிமைத்தொகை மாதம் ரூ.1000 வழங் கப்படுகிறது. விடியல் பயணம் மூலம் பெண்கள் பயன் பெறுவார்கள். மகளி ருக்கு எண்ணற்ற திட் டங்களை இந்த அரசு செயல்படுத்தி உள்ளது.இந்த அரசுக்கு மகளிர் உறுதுணையாக இருக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில், மாவட்ட அவைத்தலைவர் தட்ர அள்ளி நாகராஜ், மாநில பிரச்சார குழு தலைவர் டாக்டர். மாலதி நாராயணசாமி, மாநில வர்த்தக ரணி துணை செயலாளர் அன்பரசன், மாவட்ட துணை செயலாளர் சாவித்திரி கடலரசு மூர்த்தி, மாவட்ட பொருளாளர் கதிரவன், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் லட்சுமி பிரியா, மகளி ரணி நிர்வாகிகள் புஷ்பா, சுமித்ரா, தவமணி மற்றும் நிர்வாகிகள் நாகராசன், அஸ்லாம், வேலுமணி, கிருபாகரன் உள்ளிட்டோ கலந்து கொண்டனர்.

# பீர்க்கங்காரணை பகுதி 59வது வார்டு வடக்கு வட்ட கழக சார்பில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பிறந்த நாளை முன்னிட்டு பெண்களுக்கான சமையல் போட்டி மற்றும் பேச்சுப் போட்டி சிறப்பாக நடைபெற்றது





பெருங்களத்தூர், பிப்.10-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட பீர்க்கங்கரணை பகுதி 59வது வார்டு வடக்கு வட்ட கழக சார்பில் மறைந்த தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா ஜெயலலிதா அவர்களின் 78வது பிறந்த நாளை முன்னிட்டு, அதிமுக சார்பில் பெண்களுக்கான சமையல் போட்டி மற்றும் சமுதாய வளர்ச்சியில் மகளீரின் பங்கு என்ற தலைப்பில் பேச்சுப் போட்டி வெகு சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சி டி.டி.கே. நகர் 4வது மெயின் ரோடு, சாரதா பல் மருத்துவ மனை அருகில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக செங்கல்பட்டு மேற்கு மாவட்ட செயலாளர் சிட்ல பாக்கம் ச.இராஜேந்திரன் கலந்து கொண்டு, போட்டிகளில் பங்கேற்ற பெண்களை பாராட்டி பரிசுகளை வழங்கினார்.

அவர் தனது உரையில், பெண்கள் சமூக வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிப்பதாகவும், பெண்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு நலத்திட்டங்களை அமல்படுத்தியவர் ஜெயலலிதா என்றும் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்ச்சி பகுதி செயலாளர் எஸ்.வளையாபதி தலைமையில் 59வது வார்டு வடக்கு வட்ட செயலாளர் லயன் ஆர்.ஜெகதீசன் ஏற்பாட்டில் நடைபெற்றது

நிகழ்ச்சியின் தொடக்கத்தில் கே.ஜமுனா, எஸ்.உஷா, அன்பரசி ஆகியோர் கலந்து கொண்டு அனைவரையும் வரவேற்று உரையாற்றினர்.

சமையல் போட்டி மற்றும் பேச்சுப் போட்டிகளில் பெண்கள் உற்சாகமாக பங்கேற்று தங்களின் திறமைகளை வெளிப்படுத்தினர் இந்த நிகழ்ச்சியில் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி இணை செயலாளர் ராஜ்குமார், செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் தகவல் தொழில்நுட்ப பிரிவு மாவட்ட துணைச் செயலாளர் ஆர்.ரவிச்சந்திரன், மாவட்ட மருத்துவ அணி இணைச் செயலாளர் திவ்யா பாரதி ஜானகிராமன், பகுதி கழக நிர்வாகிகள் ஹரிஹரன், ஆறுமுகம், அமைப்பு சாரா சரவணன், எம்.ஜி.ஆர்.மன்ற செயலாளர் சரவனண், வர்த்தக அணி செயலாளர் அர்ஜூனன், மாணவர் அணி செயலாளர் குணா, இளைஞர் அணி செயலாளர் அர்ஜூனன், மாவட்ட வழக்கறிஞர் பிரிவு துணை செயலாளர், வட்ட கழக நிர்வாகிகள் டி.ஆர்.ஏழுமலை, பி..கதிர்ரேசன் சி.பாண்டியன், கதிர்மதியன், விஜய்நிர்மல், நேதாஜி, தெற்கு வட்ட செயலாளர் பிரபாகரன், 60வது வார்டு தெற்கு வட்ட செயலாளர் வெற்றி செல்வன், சிவக்குமார் ஸ்ரீதேவ் மோகன் மற்றும் அர்ஜூனன், மகளீர் அணி ரதிதேவி, சித்ரா, வி.ராஜாமணி, ரேவதி மாணவிகள் பொது மக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



# தூய்மைப் பணியாளர்களுக்கான உணவுத் திட்ட விரிவாக்கம் கிருஷ்ணகிரியில் நலத்திட்ட உதவிகள் வழங்கல்

கிருஷ்ணகிரி, பிப்10-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்த தூய்மைப் பணியாளர்களுக்கான உணவுத் திட்ட விரிவாக்கத்தை தொடர்ந்து, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டது.

கிருஷ்ணகிரியில் உள்ள ஒரு தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் தினேஷ்குமார் மற்றும் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் ஆகியோர் தலைமையிலானார்கள். இந்நிகழ்ச்சியில் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கப்பட்டதுடன், பல்வேறு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தலைவர்கள் மற்றும் அதிகாரிகள், பொதுச் சுகாதாரத்தை பாதுகாப்பதில் தூய்மைப் பணியாளர்களின் பங்கு மிக முக்கியமானது எனவும், அவர்களின் நலனை கருத்தில் கொண்டு தமிழக அரசு பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருவதாகவும் தெரிவித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் நகராட்சி ஆணையாளர் சதீஷ்குமார், நகர மன்ற துணைத் தலைவர் சாவித்திரி கடலரசு மூர்த்தி, திமுக நகர பொறுப்பாளர்கள் அஸ்லம், வேலுமணி, மாவட்டத் துணைச் செயலாளர் கோவிந்தசாமி, நகர மன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அதிகாரிகள் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

இந்த உணவுத் திட்ட விரிவாக்கம் தூய்மைப் பணியாளர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றதாகவும், அவர்களிடையே மகிழ்ச்சியும் நம்பிக்கையும் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.



# காவேரிப்பட்டணம் பேரூராட்சியில் தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு திட்டம் தொடக்க விழா

கிருஷ்ணகிரி, பிப்.10-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் தேர்வு நிலை பேரூராட்சியில் தூய்மை பணியாளர்களுக்கு தமிழக அரசு சார்பில் காலை உணவு திட்டம் விரிவாக்கம் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பேரூராட்சி செயல் அலுவலர் ராணி அனைவரையும் வரவேற்று பேசினார். நிகழ்ச்சியில் பேரூராட்சி தலைவர் அம்சவேணி செந்தில்குமார் கலந்து கொண்டு காலை உணவு திட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஓட்டுனர் அணி தலைவர் செந்தில்குமார்,ஒன்றிய செயலாளர் தேங்காய் சுப்பிரமணி,தலைமை எழுத்தர் வெங்கடாசலம்,பேரூராட்சி உறுப்பினர்கள்,அமுதா பழனி, கோகுல்ராஜ், முத்து,அமுத சக்தி, சின்ராஜ்,தமிழ்செல்வி சோபன்பாபு, நியமன உறுப்பினர்பசவராஜ், ஒப்பந்ததாரர் சிற்றரசு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.நிகழ்ச்சியின் முடிவில் பேரூராட்சி துணைத் தலைவர் மாலனி மாதையன் நன்றி கூறினார்.





# சிவகங்கை நகராட்சியில் தூய்மைப் பணியாளர்களுக்கான உணவு வழங்கும் திட்டம் தொடக்கம்

சிவகங்கை, பிப்.11-

தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்த, தூய்மைப் பணியாளர்களின் பசி போக்கும் உன்னதத் திட்டம் நேற்று சிவகங்கை நகராட்சியில் முறைப்படி தொடங்கப்பட்டது.

திட்டத்தின் நோக்கம் நகரத்தின் தூய்மைக்காகத் தினசரி அயராது உழைக்கும் தூய்மைப் பணியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்குத் தரமான உணவு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

தொடக்க விழா சிவகங்கை நகராட்சியில் நடைபெற்ற இந்தத் தொடக்க விழாவிற்கு நகர் மன்றத் தலைவர் துரை ஆனந்த் தலைமை தாங்கி, தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கி திட்டத்தை தொடங்கி வைத்தார்.

கலந்துகொண்டவர்கள் இந்நிகழ்ச்சியில் பின்வருவோர் முன்னிலை வகித்தனர்:

* நகராட்சி ஆணையர்
* நகர்மன்ற உறுப்பினர்கள் (கவுன்சிலர்கள்)
* அரசு அதிகாரிகள்
* தூய்மைப் பணியாளர்கள்

முக்கிய அம்சம்

இத்திட்டத்தின் மூலம் நகராட்சியில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்களுக்குத் தினசரி உணவு வழங்கத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. பணியாளர்களின் பணிச்சுமையை உணர்ந்து, அவர்களின் ஆரோக்கியம் மற்றும் பசியைப் போக்கும் வகையில் இத்திட்டம் அமையும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

# கோடைகாலம் துவங்குவதை முன்னிட்டு இளநீர் விற்பனை அதிகரிப்பு

கரூர், பிப்.10-

கோடை காலம் துவங்குவதை முன்னிட்டு நகரின் பல்வேறு பகுதிகளில் இளநீர் விற்பனை அதிகரிக்க துவங்கியுள்ளது.ஆண்டுதோறும் மார்ச் முதல் மே மாதம் வரை மூன்று மாதங்கள் கோடை காலமாக உள்ளது.

இந்த காலக்கட்டத்தில் உச்சபட்ச வெயில் வாட்டி வதைக்கும். இதனை சமாளிக்க பொதுமக்கள், இளநீர், தர்ப்பூசணி, கரும்புச்சாறு போன்ற பல்வேறு பானங்களை வாங்கி பருகி கோடையை சமாளித்து வருகின்றனர்.

அந்த வகையில் தர்ப்பூசணி பல்வேறு பகுதிகளில் தற்போது விற்பனைக்குவைக்கப்பட்டுள்ளன. இதே போல், கோவை சாலை, தாந்தோணிமலை, கரூர் மனோகரா கார்னர், மார்க்கெட் போன்ற பகுதிகளில் பொள்ளாட்சி போன்ற பகுதிகளில் இருந்து வரவழைக்கப்பட்ட இளநீர் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

ரூ., 60ல் இருந்து 70 வரை இளநீரின் அளவுக்கு ஏற்ப விற்பனை செய்யப்படுகிறது. கோடைக்கு உகந்த பானங்களில் இளநீர் மட்டுமே இயற்கை பானம் என்பதால் அனைத்து தரப்பினர்களும் இதனை ஆவலுடன் வாங்கி பயன்படுத்த துவங்கியுள்ளனர். மேலும், கோடை உச்சத்தில் இருக்கும் சமயத்தில் இதன் விற்பனை மேலும் அதிகரிக்கும்.



# பெருங்களத்தூரில் சாலைகளில் பள்ளம் தோண்டி, புதிய சாலை சேதம், அப்பகுதி மக்கள் கடும் அவதி

தாம்பரம், பிப்.10-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி நான்காவது மண்டலம் பெருங்களத்தூர் கிருஷ்ணா சாலை எப்போதும் பரபரப்பாக இருக்கக்கூடிய சாலையாக இருந்து வருகிறது.மேலும் குண்டுமேடு பகுதிக்கு செல்ல இதுவே பிரதான சாலை என்பதால்,எந்த நேரமும் வாகன போக்குவரத்து இருக்கும்.

இச்சாலையில் கான்கிரீட் சாலை போடபப்பட்டு ஒருசில மாதங்கள் கூட முடி யாத நிலையில் மின் வாரிய ஊழியர்கள் பள்ளம் தோண்டுகின்றனர்.இச்சம்பவத்திற்கு அப்பகுதி குடியிருப்போர் நலச்சங்கத்தினர் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

பெருங்களத்தூர் கிருஷ்ணா சாலை, முத்து இருளாண்டி தெருக்களில், கான்கிரீட் சாலை அமைத்து ஓராண்டு ஆவதற்குள் மின் இணைப்பு கேபிள் பதிப்பதற்காக பள்ளம் தோண்டி நாசப்படுத்துகின்றனர்.

அரசு துறைகளுக்கிடையே ஒருங்கிணைப்பு இல்லாததே இதற்கு காரணம்.அதிகாரிகள் அலட்சியத்தால் மக்கள் வரிப்பணம் தான் வீணடிக்கப்படுகிறது. அதேபோல காமராஜர் நெடுஞ்சா லையில் மழைநீர் கால்வாய் கட்டுகின்றனர். அங்குள்ள கட்டப்பட ஆக்கிரமிப்புகளை அகற்றவில்லை.இது தொடர்பாக புகார் தெரிவித்தும் மாநகராட்சி எதையும் கண்டுக் கொள்ளாமல் உள்ள தாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

# சிவகங்கை மாவட்டம் மானாமதுரை மதகுபட்டி , திருப்பத்தூர் இடையமேலூர், காளையார் கோவில் கல்லல், ஆகிய துணை மின் நிலையங்களில் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை மின்தடை



சிவகங்கை, பிப்.10-

*மானாமதுரை துணை மின் நிலையத்தில் நாளை (பிப்11) மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெறுவதால் மானாமதுரை, சிப்காட், இராஜகம் பீரம், முத்தனேந்தல், இடைக் காட்டூர், மிளகனூர், கட்டிக்குளம், தெ.புதுக்கோட்டை, முனைவென்றி, குறிச்சி, கச்சாத்தநல்லூர், நல்லாண்டிபுரம், சங்கமங்கலம், அன்னவாசல், கீழப்பசலை..

*மதகுபட்டி துணை மின் நிலையத்தில் மாதாந்திர பராமரிப்புப் பணிகள் நாளை (பிப் 11) மதகுபட்டி,வீரப்பட்டி, கீழப்பூங்குடி, பிரவலூர், பேரணிபட்டி, ஒக்கூர், காடனேரி, அம்மன்பட்டி, நகரம்பட்டி, காளையார் மங்கலம், கருங்கா ப்பட்டி, கருங்கா லக்குடி, அண்ணாநகர், பர்மாகாலனி, நாலுகோட்டை, அரளிக்கோட்டை, ஜமீன்தார்பட்டி, ஆவத்தரான்பட்டி, கணேசபுரம், ஏரியூர்...

*திருப்பத்தூர் துணை மின் நிலையத்தில் நாளை (பிப்11) திருப்புத்தூர், பிள்ளையார்பட்டி, தென்கரை, கருப்பூர், மல்லாக் கோட்டை திருக்கோஷ்டியூர்,

*இடையமேலூர் துணை மின் நிலையத்தில் இருந்து செல்லும் பகுதிகளுக்கு நாளை (பிப்11) தமராக்கி, குமாரப்பட்டி,முடிகண்டம் ,கண்டாங்கிப்பட்டி ,மலம்பட்டி,.பாப்பாகுடி ,

இடையமேலூர், சாலூர், கூட்டுறவுப்பட்டி, மேலப்பூங்குடி, சக்கந்தி, புதுப்பட்டி, தேவன்கோட்டை ,வில்லிபட்டி, ஒக்குபட்டி...

*காளையார் கோவில் துணை மின் நிலையத்தில் மாதாந்திர மின் பராமரிப்பு காரணமாக நாளை(பிப் 11) காளையார்கோவில், நாட்டரசன் கோட்டை, புலியடிதம்பம், பள்ளித் தம்மம், சருகணி, பொன்னலிக் கோட்டை, கொல்லங்குடடி, கள்ளத்தி, கருங்காலி, கருமந்தக்குடி, சாத்தரசன் கோட்டை, பெரிய கண்ணனூர், ஒய்யவந்தான் ...

*கல்லல் துணை மின் நிலையத்தில் மாதாந்திர பராமரிப்புப் பணிகள் நடைபெறவிருப்பதால் நாளை ( பிப்11) கல்லல், சிறுவயல், குருந்தம்பட்டு, மாலைகண்டான், வெற்றியூர், சாத்தரசம்பட்டி, செம்பனூர், செவரக் கோட்டை, பாகனேரி, பனங்குடி, கண்டுபட்டி, கௌரிப்பட்டி

ஆகிய துணை மின் நிலையங்களுக்கு மின் வினியோகம் இருக்காது என மின் செயற்பொறியாளர்கள் அறிவித்துள்ளார்கள்.



# பாரதியார் - திருவள்ளுவர் விழா: காரைக்குடியில் 500 மாணவர்கள் பங்கேற்பு

காரைக்குடி, பிப்.10-

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி மாநகரம் இந்து மதாபிமான சங்கம் சார்பில், பாரதியார் கவிதை ஒப்பித்தல், திருக்குறள் ஒப்பித்தல் மற்றும் கட்டுரைப் போட்டிகள் மாவட்ட அளவில் சிறப்பாக நடைபெற்றது., இப்போட்டிகளை ஒருங்கிணைப்பாளர் சித. கண்ணன் முன்னிலையில் நடத்தப்பட்ட நிலையில், 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் 500 மாணவர், மாணவிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். போட்டிகளில் முனைவர் நா. வள்ளி, ஆசிரியர்கள் மெ. செயங்கொண்டான், அ. அறிவுச்செல்வி உள்ளிட்ட 30 ஆசிரியர்கள் நடுவர்களாகப் பணியாற்றினர்., பாரதியார், திருவள்ளுவர் ஒப்பித்தல் மற்றும் கட்டுரைப் போட்டிகள் 3 பிரிவுகளாக, 3 தலைப்புகளில் நடத்தப்பட்டன. இதில் வெற்றி பெற்றவர்களுக்கு முதல் பரிசுகளாக ரூ.3001, ரூ.2001, ரூ.1001 அறிவிக்கப்பட்டது. மூன்று பிரிவுகளிலும் தேர்வு செய்யப்பட்ட 18 பேருக்கு இப்பரிசுகள் வழங்கப்பட்டன. மேலும் 42 பேருக்கு தலா ரூ.500 வீதம் ஆறுதல் சிறப்பு பரிசுகளாக வழங்கப்பட்டது.,பரிசளிப்பு விழா காரைக்குடி முத்துப்பட்டணம் வித்யாகிரி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி அரங்கில் நடைபெற்றது. சங்கத் தலைவர் வீர. இராமநாதன் (எ) மோகன் தலைமையேற்று அனைவரையும் வரவேற்றுப் பேசினார். சங்கப் பொருளாளர் எஸ்.எஸ். இராமசாமி முன்னிலை வகித்தார். விழாவில் சிறப்பு விருந்தினர்களாக அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர், மதிப்புறு கர்னல் பேராசிரியர் க. இரவி, மேனாள் அமைச்சர் மு. தென்னவன், எஸ். மாங்குடி எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களை பாராட்டி சிறப்புரையாற்றினர். விழாவின் முடிவில் சங்க துணைச் செயலாளர் பி.எல். லெட்சுமணன் நன்றி கூறினார்.

# நாச்சியப்ப சுவாமிகள் கல்லூரியில் YRC வழிகாட்டல் மற்றும் மரக்கன்று நடும் விழா

கோவிலூர், பிப்.10-

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அருகே கோவிலூரில் அமைந்துள்ள நாச்சியப்ப சுவாமிகள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் (Youth Red Cross – YRC) அணி சார்பில் YRC வழிகாட்டல் மற்றும் மரக்கன்று நடும் விழா 09.02.2026 அன்று காலை 9.30 மணிக்கு கல்லூரி கருத்தரங்கு அரங்கில் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சி கல்லூரி செயலாளர் ஸ்ரீ ல ஸ்ரீ நாராயண ஞான தேசிக சுவாமிகள் அவர்களின் ஆசியுடன் தொடங்கியது. கல்லூரி தாளாளர் முனைவர் எம். வீரப்பன் அவர்களின் வழிகாட்டுதலோடு நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் டாக்டர் க. கலா அவர்கள் தலைமையுரையாற்றி, இளைஞர் செஞ்சிலுவைச் சங்கத்தின் முக்கியத்துவத்தையும், மாணவர்களின் ஒழுக்கம்,



தலைமைத் திறன் மற்றும் சேவை மனப்பான்மையை வளர்த்தெடுப்பதின் அவசியத்தையும் எடுத்துரைத்தார். மேலும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக மரக்கன்று நடும் அவசியத்தை வலியுறுத்தினார்., இந்த நிகழ்ச்சி, இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் சிவகங்கை மாவட்டத் தலைவர் நல்லாசிரியர் திரு. வி. சுந்தரராமன் மற்றும் சிவகங்கை மாவட்ட YRC ஒருங்கிணைப்பாளர் முனைவர் டாக்டர் ஹெச். பரிதா பேகம் ஆகியோரின் ஆலோசனையின் படி நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் அழகப்பா பல்கலை க்கழக YRC மண்டல ஒருங்கிணைப்பாளர் முனைவர் டாக்டர் க. கணேசமூர்த்தி கலந்து கொண்டு, YRC அமைப்பின் நோக்கங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்து மாணவர்களுக்கு வழிகாட்டினார். மாணவர்கள் சமூகப்பணிகளில் ஈடுபட வேண்டிய அவசியத்தையும், மரக்கன்று நடும் முக்கியத்து வத்தையும் வலியுறுத்தி உரையாற்றினார்., இதனைத் தொடர்ந்து நடைபெற்ற மரக்கன்று நடும் நிகழ்ச்சியில் மாணவர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நட்டு, அவற்றை பாதுகாக்க உறுதியெடுத்தனர். இதன் மூலம் மாணவர்களிடையே சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது., நிகழ்ச்சியின் தொடக்கத்தில் கல்லூரி துணை முதல்வர் திருமதி எம். சீதாலட்சுமி அவர்கள் வரவேற்புரை வழங்கினார். கல்லூரி ஆலோசகர் முனைவர் ஆர். சந்திரமோகன் அவர்கள் சிறப்பு பங்கேற்புடன் மரக்கன்று நடும் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். நிகழ்ச்சியின் நிறைவில் YRC ஒருங்கிணைப்பாளர் திரு. கு. ராஜ்குமார் அவர்கள் நன்றியுரை வழங்கினார்., இந்த நிகழ்ச்சி மாணவர்களிடையே சமூகப்பணி உணர்வையும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வையும் ஏற்படுத்திய அர்த்தமுள்ள மற்றும் பயனுள்ள நிகழ்வாக அமைந்தது.




# தென்சென்னை வடக்கு மாவட்டத்தில் நடைபெற்ற எஸ்.டி.பி.ஐ கட்சியின் பூத் கமிட்டி கள ஆய்வுக் கூட்டம்

சென்னை, பிப்.10-

தென் சென்னை எஸ்.டி.பி.ஐ கட்சியின் வடக்கு மாவட்ட சட்டமன்ற தொகுதிகளின் பூத் கமிட்டி ஆய்வுக் கூட்டம் நேற்று (08.02.26) நடைபெற்றது. மாவட்டத் தலைவர், அப்துல் ரசாக் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், கட்சியின் மாநில பொதுச் செயலாளர் நிஜாம் முகைதீன், மாநிலச் செயலாளர் ஹமீத் ஃப்ரோஜ் கலந்துகொண்டு, தொகுதி அளவில் அமைக்கப்பட்ட பூத் விவரங்கள் குறித்து பூத் கமிட்டி பொறுப்பாளர்களிடம் விரிவான கள ஆய்வு மேற்கொண்டனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட பொதுச் செயலாளர் அன்சாரி, துணைத் தலைவர்கள் முகம்மது சலீம், அப்துல் மஜீத் உள்ளிட்ட மாவட்ட மற்றும் மயிலாப்பூர், தி.நகர், விருகம்பாக்கம் தொகுதி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.



■ தென்காசி மாவட்டம் குருவிகுளம் வட்டாரம் கலிங்கப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" உயர் மருத்துவ சேவை முகாமில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல் கிஷோர் அவர்கள் கலந்து கொண்டு மருத்துவ உபகரணங்களை வழங்கினார்.



■ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில், தமிழ்நாடு முழுவதும் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு முதலமைச்சரின் உணவுத்திட்டம் விரிவாக்கத்தை காணொளிக்காட்சி வாயிலாக தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, தேனி மாவட்டம், ஆண்டிபட்டி பேரூராட்சியில் நடைபெற்ற தூய்மைப் பணியாளர்களுக்கான முதலமைச்சரின் உணவுத்திட்டம் விரிவாக்கம் நிகழ்ச்சியில் ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் ஆ.மகாராஜன் அவர்கள் கலந்துகொண்டு, தூய்மைப் பணியாளர்களுக்கு உணவுகளை பரிமாறினார்கள்.



■ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில், தமிழ்நாடு முழுவதும் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு முதலமைச்சரின் உணவுத்திட்டம் விரிவாக்கத்தை காணொளிக்காட்சி வாயிலாக தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் நகராட்சியில் நடைபெற்ற தூய்மைப் பணியாளர்களுக்கான முதலமைச்சரின் உணவுத்திட்டம் விரிவாக்கம் நிகழ்ச்சியில் தேனி பாராளுமன்ற உறுப்பினர் தங்கதமிழ்செல்வன் அவர்கள் கலந்துகொண்டு, தூய்மைப் பணியாளர்களுடன் அமர்ந்து உணவருந்தினார்கள்.



■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், தமிழ்வளர்ச்சித்துறை சார்பாக, திருக்குறள் வாரவிழா முன்னிட்டு நடைபெற்ற போட்டிகளில் வெற்றிபெற்ற 93 நபர்களுக்கு பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் அவர்கள் வழங்கினார். உடன், மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) கோபு, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) அபிநயா, தமிழ்வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் திருமதி.கனிமொழி உள்ளிட்ட பலர் உள்ளனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை சார்பாக, கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு, கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு தின உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் அவர்கள் தலைமையில் அனைத்து அரசு அலுவலர்கள் எடுத்துக்கொண்டனர். உடன், மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) கோபு, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) அபிநயா, துணை ஆட்சியர் (பயிற்சி) செல்வி.க்ரிதி காம்னா, தொழிலாளர்நலத்துறை உதவி ஆணையர்கள் ராஜசேகர் (அமலாக்கம்), மாதேஸ்வரன் (சமூகபாதுகாப்பு) உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பணியாற்றி வரும் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைத்தார்

காரைக்குடி பிப்10-

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி மாநகராட்சிக்குட்பட்ட தனியார் மஹாலில் நடைபெற்ற விழாவில், மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி தலைமையில், காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.மாங்குடி முன்னிலையில் பங்கேற்று, சிறப்பித்து தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழகம் முழுவதும் சீரான வளர்ச்சியை பெற்றிடும் வகையிலும், குறிப்பாக அடித்தட்டு மக்களின் வாழ் வாதார மேம்பாட்டி ற்கெனவும் எண்ணற்ற திட்டங்களை தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தி பிற மாநிலங் களுக்கு முன்மாதிரியான முதலமைச்சராக திகழ்ந்து வருகிறார்கள்.

குறிப்பாக, தூய்மையான உள்ளம் கொண்டவர்களாகிய தூய்மை பணியாளர்களின் நலனை காக்கின்ற வகையிலும் திட்டங்களை வகுப்பதில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நிகராக இதுவரை வேறு எவரும் இல்லை.

மேலும், தூய்மைப் பணியாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோரின் நலன் கருதி முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் 2007 ஆம் ஆண்டு, "தூய்மை பணியாளர் நல வாரியம்" அமைக்கப்பட்டது. இவ்வாரியத்தில் பதிவு செய்த உறுப்பினர்களுக்கு விபத்து மரண உதவித்தொகை, இயற்கை மரண நிதியுதவி, ஈமச்சடங்கு நிதியுதவி, கல்வி உதவித்தொகை, திருமண நிதியுதவி, மகப்பேறு நிதியுதவி, கண் கண்ணாடி வாங்க நிதியுதவி, முதியோர் ஓய்வூதியம், வீடு வழங்கும் திட்டம் போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்ப ட்டு வருகின்றன. அதுமட்டுமன்றி, தூய்மை பணியா ளர்களுக்கு அவர்களின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு, பாதுகாப்பு உபகரணங்கள் போன்றவைகளும் வழங்கப்பட்டு வருகிறது. முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் வழியில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தூய்மைப் பணியளார்களின் நலன் காக்கின்ற வகையில், பல்வேறு புதிய திட்டங்களையும் தமிழகத்தில் அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

அதன்படி, நமது சுற்றுப்புறத்தினை தூய்மையாக பேணிக்காத்து வரும் தூய்மைப் பணியாளர்களின் நலனில் அக்கறைக் கொண்டு, " மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தினை இன்றையதினம் தமிழ்நாடு முதலமைச்சர் திருவள்ளூர் மாவட்டத்தில் தொடங்கி வைத்துள்ளார்கள்.





முன்னதாக, கடந்த 15.11.2025 அன்று பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர் களுக்கென முதலமைச்சரின் உணவுத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, தற்போது தமிழகம் முழுவதும்" மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்கள் பயன்பெறும் வகையில், உணவு வழங்கும் திட்டமானது தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பணிபுரியும் நிரந்தர மற்றும் ஒப்பந்த தூய்மை பணியாளர்கள், டெங்கு தடுப்பு பணியாளர்கள், பள்ளி வளாகம் சுத்தம் செய்யும் நிரந்தர மற்றும் ஒப்பந்த தூய்மை பணியாளர்கள், நிரந்தர மற்றும் ஒப்பந்த பொது சுகாதார வாகன ஓட்டுநர்கள், நிரந்தர மற்றும் ஒப்பந்த துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் என பல்வேறு நிலைகளில் பணிபுரியும் பணியாளர்கள் பயன்பெறவுள்ளனர்.

அந்தவகையில், சிவகங்கை மாவட்டத்தில், காரைக்குடி மாநகராட்சியில் பணிபுரியும் 84 நிரந்தர தூய்மை பணியாளர்களும், 395 ஒப்பந்த தூய்மை பணியாளர்களும், 132 டெங்கு தடுப்பு பணியாளர்களும், பள்ளி வளாகம் சுத்தம் செய்யும் 62 ஒப்பந்த தூய்மை பணியாளர்களும், சிவகங்கை நகராட்சியில் பணிபுரியும் 195 தூய்மை பணியாளர்களும், தேவகோட்டை நகராட்சியில் பணிபுரியும் 26 நிரந்தர தூய்மை பணியாளர்களும், 1 பொது சுகாதார வாகன ஓட்டுநரும், 104 ஒப்பந்த தூய்மை பணியாளர்களும், 6 ஒப்பந்த துப்புரவு பணி மேற்பார்வையாளர்களும், 16 ஒப்பந்த பொது சுகாதார வாகன ஓட்டுநர்களும், 40 டெங்கு தடுப்பு பணியாளர்களும், பள்ளி வளாகம் சுத்தம் செய்யும் 12 தூய்மை பணியாளர்களும், மானாமதுரை நகராட்சியில் பணிபுரியும் 25 நிரந்தர தூய்மை பணியாளர்களும், 64 ஒப்பந்த தூய்மை பணியாளர்களும், 9 பொது சுகாதார வாகன ஓட்டுநர்களும், 26 டெங்கு தடுப்பு பணியாளர்கள் மற்றும் மாவட்டத்திலுள்ள 11 பேரூராட்சிகளில் பணிபுரியும் நிரந்தர மற்றும் ஒப்பந்த தூய்மை பணியாளர்கள், பொது சுகாதார வாகன ஓட்டுநர்கள் என மொத்தம் 643 பணியாளர்களும்

என ஆக மொத்தம் சிவகங்கை மாவட்டத்திலுள்ள 1 மாநகராட்சி, 3 நகராட்சிகள் மற்றும் 11 பேரூராட்சிகளில் பல்வேறு நிலைகளில் பணிபுரிந்து வரும் மொத்தம் 1,840 பணியாளர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள, தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் பயன்பெறவுள்ளனர். இப்பணியாளர்களுக்கு, உணவு வழங்குவதற்கான கலன்களும் (Tiffen Box) களும் வழங்கப்படுகிறது.

மேலும், சம்மந்தப்பட்ட துறை சார்ந்த அலுவலர்கள், தூய்மைப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரம், அளவு ஆகியவற்றில் எவ்வித குறைபாடின்றி முறையாக வழங்குவதை உறுதி செய்திடல் வேண்டும்.

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் வழியில் தமிழகத்தில் அனைத்து தரப்பு மக்களுக்கு மான ஆட்சியினை தமிழ்நாடு முதலமைச்சர் வழங்கி வருகிறார்கள். அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் பயன்பெற்று வரும் பயனாளிகள், அதனை முறையாக பயன்படுத்திக் கொண்டு, வாழ்வில் வளம் பெறவேண்டும் என கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள், தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தினைத் தொடங்கி வைத்து, தூய்மை பணியாளர்களுடன் அமர்ந்து உணவருந்தினார்.

முன்னதாக, தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்திற்காக, உணவு கொண்டு செல்லும் வாகனத்தினை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், காரைக்குடி மாநகராட்சி துணை மேயர் ந.குணசேகரன், காரைக்குடி மாநகராட்சி ஆணையாளர் சங்கரன், மாநகர் நல அலுவலர் வினோத்ராஜா , 19வது வார்டு மாமன்ற உறுப்பினர் ஹரிதாஸ் துரைராஜ் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள், தூய்மைப் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# தாராபுரத்தில் திருப்பூர் தெற்கு மாவட்ட இளைஞரணி சூர்யா நற்பணி இயக்கம் பெயர் பலகை திறப்பு விழா

திருப்பூர், பிப்.10-

நடிகர் சூர்யா நற்பணி இயக்கம் சார்பாக திருப்பூர் தெற்கு மாவட்ட இளைஞரணி பொறுப்பாளர்களாக செயலாற்றி வந்த அகிலன் மற்றும் குகன் அப்பதவியில் இருந்து விடுவிக்கப்பட்டு, தற்போது மாவட்ட இளைஞரணி தலைவர் அகிலன், செயலாளர் குகன், பொருளாளர் மாயகிருஷ்ணன், அமைப்பாளர் மணிகண்டன், ஒருங்கிணைப்பாளர் கவின்குமார், து.தலைவர் லிமோன் சஞ்சய், து.செயலாளர் தன்வின்,து. பொருளாளர் கிருஷ்ணன், து.ஒருங்கிணைப்பாளர் விமல் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர், இவ்விழா தாராபுரம் உடுமலை ரோடு ஜீவா காலனியில் மாவட்ட கௌரவத் தலைவர் பொன். செல்வராஜ், திருப்பூர் தெற்கு மாவட்ட தலைவர் அருண், செயலாளர் முருகானந்தம், பொருளாளர் குரு மற்றும் வடக்கு மாவட்ட தலைவர் சங்கர், ஆகியோரால் பெயர் பலகை திறக்கப்பட்டது மேலும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்



■ தமிழக முதல்வர் நேற்று காலை மாநகராட்சிகள் நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் தூய்மை பணியாளர்களுக்கு உணவு திட்டம் விரிவாக்கம் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கான நலத்திட்ட உதவிகளை வழங்கினார் அதனைத் தொடர்ந்து தேவகோட்டை நகராட்சியில் தூய்மை பணியாளர்களுக்கு தனியார் திருமண மஹாலில் நகர் மன்ற தலைவர் சுந்தரலிங்கம் தலைமையில் துணைத் தலைவர் ரமேஷ், பொறியாளர் மீரா அலிதிமுக நகர செயலாளர் பாலமுருகன், நகர் மன்ற உறுப்பினர் வழக்கறிஞர் கமலக்கண்ணன், ஐயப்பன் முன்னிலையில் காலை உணவு திட்டம் வழங்கப்பட்டது இந்நிகழ்ச்சியில் நகராட்சி தூய்மை பணியாளர்கள் சுமார் 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர் சுகாதார அலுவலர் பாண்டி செல்வம் மற்றும் நகராட்சி பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



# மானாமதுரையில் தனியார் நிறுவனப் பாதுகாவலர்களுக்குத் தீத்தடுப்பு விழிப்புணர்வு பயிற்சி

மானாமதுரை, பிப்.10-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தீயணைப்பு நிலையத்தின் சார்பில், தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் பாதுகாப்புப் பணியாளர்களுக்குத் (Security Guards) தீ விபத்து மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வு பயிற்சி முகாம் நடைபெற்றது.

பயிற்சியின் தலைமை மேலதி காரிகளின் உத்தரவின்படி நடைபெற்ற இந்தப் பயிற்சி முகாமிற்கு, மானாமதுரை தீயணைப்பு நிலைய அலுவலர் ஆ. ரமேஷ் தலைமை தாங்கினார்.

பயிற்சியின் முக்கிய அம்சங்கள் இந்த விழிப்புணர்வு முகாமில் பாதுகாவலர்களுக்குப் பின்வரும் செய்முறை விளக்கங்கள் அளிக்கப் பட்டன:

* தீ தடுப்பு முறைகள்: எதிர்பாராத விதமாகத் தீ விபத்து ஏற்படும் போது, அதனை ஆரம்ப நிலையிலேயே எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது குறித்து விளக்கப்பட்டது.

* கருவிகள் பயன்பாடு: தீயணைப்புக் கருவிகளை (Fire Extinguishers) முறையாகக் கையாளும் விதம் குறித்துச் செய்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

* பாதுகாப்பு நடவடிக் கைகள்: பொதுமக் களையும் உடைமை களையும் தீ விபத்திலிருந்து பாதுகாப்பதற்கான முன்னெச்சரிக் கை நடவடிக் கைகள் குறித்து அறிவுறுத்தப்பட்டது.

முடிவுரை நிலைய அலுவலரின் நேரடி மேற்பார்வையில் நடைபெற்ற இந்தப் பயிற்சியில் ஏராளமான தனியார் நிறுவனப் பாதுகாவலர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றனர். விபத்தில்லாச் சூழலை உருவாக்கும் நோக்கில் இந்தப் பயிற்சி வழங்கப்பட்டதாக நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.



# ஒட்டன்சத்திரம் அருகே இறந்த மூதாட்டியின் உடலை மயானத்தில் அடக்கம் செய்ய எதிர்ப்பு அமைதி பேச்சுவார்த்தை

ஒட்டன்சத்திரம், பிப்.10-

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் அடுத்த இடையகோட்டை அருகே அத்தப்பன்பட்டியில் ஆராயம்மாள்(70) என்பவர் உயிரிழந்தார்.

வழக்கமாக புதைக்கும் மயானத்தை ஒருவர் தனக்கு சொந்தமான நிலம் என கூறி கம்பி வேலி அமைத்ததாக கூறப்படுகிறது. இதனையடுத்து மயான ஆக்கிரமிப்பை அகற்ற போராட்டம் நடத்துவதற்காக ஏற்பாடு நடைபெற்ற நிலையில் இன்று அத்தப்பன் கிராம நிர்வாக அலுவலகத்தில் தாசில்தார் சஞ்சய்காந்தி, ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் பிரபுபாண்டியன், கள்ளிமந்தயம் இன்ஸ்பெக்டர் புகழேந்தி உள்ளிட்டோர் பங்கேற்ற அமைதி பேச்சு வார்த்தை நடைபெற்றது.

மயான ஆக்கிரமிப்பு குறித்து உயர் அதிகாரிகள் கவனத்திற்கு சென்று சமூகத் தீர்வு ஏற்பட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும். இறந்த மூதாட்டியின் உடலை தற்காலிகமாக அதே மயானத்தில் அடக்கம் செய்வதற்கு விவசாயி தடுக்க கூடாது என்றும் அமைதிப் பேச்சு வார்த்தையில் முடிவு ஏற்பட்டதை தொடர்ந்து போலீஸ் பாதுகாப்புடன் மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது



# ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் தமிழக மக்கள் முன்னேற்ற கழக அரசியல் எழுச்சி பொதுக்கூட்டம்

ராமநாதபுரம், பிப்.10-

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் தமிழக மக்கள் முன்னேற்ற கழக அரசியல் எழுச்சி பொதுக்கூட்டம் கட்சியின் மாவட்ட செயலாளர்கள் ஆர்.வி. ராஜபாண்டியன் (மேற்கு), ஆர். சுரேஷ் பாண்டியன்(கிழக்கு) தலைமை தாங்கினர். மாவட்ட தலைவர் எம். காளிதாஸ் பாண்டியன் (மேற்கு), ஆர். ராஜசேகர் (கிழக்கு) முன்னிலை வகித்தனர்.

தமிழக மக்கள் முன்னேற்ற கழக நிறுவன தலைவர் பெ. ஜான்பாண்டியன் பேசுகையில் கூறியதாவது :

தேவேந்திர குல வேளாளர் என அரசாணை பெற கஷ்டப் பட்டோம். சமுதாயத்தை சீரழிப்பதற்காக வருகின்ற கூட்டம் நிறைய உள்ளன. சமுதாயத்தினர் 100 பிரிவுகளாக உள்ளனர். சமுதாயத்தை கூறுபோட வேண்டாம்.தேவேந்திரர் சமுதாயம் வீரமிக்க சமுதாயம். சேரர்,சோழர்,பாண்டியர் வழியில் பிறந்தவர்கள் நாம். சேரர்,சோழர், பாண்டியர் தமிழர் இல்லையென ஒரு அரசியல்வாதி கூறுகிறார். சொல்பவர் தமிழனா? என்பதை யோசித்து பார்க்க வேண்டும்.

எட்டி பிழைப்பவர்களும், ஏமாற்று கூட்டங்களும் சமுதாயத்தில் இருப்பார்கள் என சொன்னால் அவர்கள் துரோகி என அர்த்தம். ஒட்டு மொத்த சமுதாயத்தினரும் விவசாயிகள்,உழைக்க பிறந்தவர்கள்.சமத்துவம் வளர வேண்டும். சமத்துவம் என்றால் சாதி,மத பேதமின்றி ஒன்றுபட்டு நாம் அனைவரும் ஒரு தாய் மக்கள் என்ற நிலையை உருவாக்க வேண்டும். இதன் மூலம் பட்டியலில் இருந்து வெளியேற வேண்டும்.

தேவேந்திர குல வேளாளர் அரசியல் அங்கீகாரம் வரவேண்டும்.தேவேந்திரர் சமுதாயத்தினரை ஏமாற்றி ஏமாற்றி பிழைக்கின்ற கூட்டம் தமிழ்நாட்டில் அதிகமாக உள்ளனர். அவர்களை அகற்ற வேண்டும் என்று சொன்னால் வரும் சட்டமன்ற தேர்தலில் பாடம் புகட்ட வேண்டும். சமத்துவம் வளருவதற்கு பட்டியலில் இருந்து வெளியேற வேண்டும் என்றார்.

தமிழக மக்கள் முன்னேற்ற கழக மாநில பொதுச் செயலாளர் முனைவர் ஜா. பிரிசில்லா பாண்டியன், துணை பொதுச் செயலாளர்கள் சண்முக சுதாகர்,நளினி சாந்தகுமாரி, கொள்கை பரப்பு செயலாளர் கோபால கிருஷ்ணன்,விவசாய அணி செயலாளர் எஸ்.எம்.சேகர், மண்டல செயலாளர் எம்.ஜி. திரவியம் ஆகியோர் பேசினர். பரமக்குடி நகர் செயலாளர் எஸ்.பாரதி தாசன் நன்றி கூறினார்.



■ தமிழகத்தில் தூய்மை பணியாளர்களுக்கு, காலை உணவு திட்டம் தொடங்கப்பட்டது. அதன் ஒரு பகுதியாக, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை நகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதனையொட்டி தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியை மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார் நேற்று தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் நகராட்சி அலுவலர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



# வத்தலக்குண்டுவில் களைகட்டியது கிடா முட்டு

வத்தலக்குண்டு, பிப்.10-

வத்தலக்குண்டுவில் கிடா முட்டும் போட்டி களைகட்டியது.திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டுவில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பிறந்தநாளை முன்னிட்டு சவுத் லயன்ஸ் கிடா முட்டு நண்பர்கள் சங்கம் சார்பாக 2ம் ஆண்டு கிடா முட்டும் போட்டி நேற்று நடைபெற்றது. இதில் திண்டுக்கல், திருச்சி, பழநி, பொள்ளாச்சி, மதுரை, தேனி, உசிலம்பட்டி, தேவாரம் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த சுமார் 150 கிடாக்கள் கலந்துகொண்டன.

பழநி சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி.செந்தில்குமார் போட்டியை துவக்கி வைத்தார். திமுக ஒன்றிய செயலாளர்கள் கே.பி.முருகன், கனிக்குமார், கனகதுரை, நகரச் செயலாளர் சின்னத்துரை, வத்தலக்குண்டு பேரூராட்சி தலைவர் சிதம்பரம், துணைத் தலைவர் தர்மலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

போட்டியில் கிடாக்கள் 75 முட்டுகள் முட்ட வேண்டும். இதில் சுமார் 30 முதல் 40 முட்டுகளுக்குள் சில கிடாக்கள் சோர்வடைந்து தோல்வியடைந்தன. ஒரு சில கிடாக்கள் 50 முதல் 55 முட்டுகள் முட்டி வெற்றி பெற்றன. வெற்றி பெற்ற கிடாக்களின் உரிமையாளர்களுக்கு வத்தலக்குண்டுவின் பிரசித்திபெற்ற வெற்றிலை நாற்றுகள் வழங்கப்பட்டன. மேலும், பீரோ, கட்டில், மெத்தை, சில்வர் அண்டா, காஸ் அடுப்பு, மிக்ஸி போன்ற பொருள்கள் பரிசாக வழங்கப்பட்டன. போட்டியை ஏராளமானோர் கண்டுரசித்தனர்.



# தாராபுரம் நகராட்சி தூய்மைப் பணியாளர்களுக்கான உணவுத் திட்டத்தை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் தொடங்கி வைத்தார்

திருப்பூர், பிப்.10-

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் நகராட்சியில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கான உணவுத் திட்டம் விரிவாக்கத் திட்டத்தை மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் அவர்கள் இன்று தொடங்கி வைத்தார்

இந்த நிகழ்ச்சியில் தாராபுரம் நகர மன்ற தலைவர் பாப்பு கண்ணன் நகராட்சி ஆணையர் முஸ்தபா, நகரச் செயலாளர் முருகானந்தம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

நகர மன்ற தலைவர் பாப்பு கண்ணன் தூய்மைப் பணியாளர்களுடன் அமர்ந்து உணவு உட்கொண்டார்.

மேலும், ஏராளமான தூய்மைப் பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் நிகழ்ச்சியில் பங்கேற்று மகிழ்ச்சி தெரிவித்தனர்.



# திண்டுக்கல்லில் டாஸ்மாக் பணியாளர் சங்கங்கள் கூட்டுக்குழு சார்பில் கடை அடைத்து ஆர்ப்பாட்டம்

திண்டுக்கல், பிப்.10-

பணி நிரந்தரம், காலமுறை ஊதியம் மற்றும் காலி மதுபாட்டில்களைத் திரும்பப் பெறும் திட்டத்தால் ஏற்படும் கூடுதல் வேலைப்பளுவைக் கண்டித்து, டாஸ்மாக் ஊழியர்கள் கடைகளை அடைத்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இன்று மதியம் 12 மணி முதல் 3 மணி வரை கடைகள் மூடப்பட்டு, திண்டுக்கல் உட்பட. தமிழகத்தில் பல இடங்களில் தொடர் போராட்டங்கள் மற்றும் முற்றுகைப் போராட்டங்கள் நடத்தப்பட்டன. பல ஆண்டுகளாக ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் ஊழியர்களை நிரந்தரமாக்க வேண்டும் மற்றும் காலமுறை ஊதியம் வழங்க வேண்டும்.

காலி பாட்டில் திட்டம்: காலி மதுபாட்டில்களைத் திரும்பப் பெறும் திட்டத்தால் (Bottle Buy-back Scheme) ஏற்படும் கூடுதல் வேலைப்பளுவைக் குறைக்க வேண்டும், அதற்கென தனி ஊழியர்களை நியமிக்க வேண்டும்.

நிர்வாகத்தின் அழுத்தம்: காலி பாட்டில்களைச் சேகரிப்பதில் பார் உரிமையாளர்கள் கூடுதல் பணம் கேட்பதைக் கண்டித்து,திண்டுக்கல்லில் பல கடைகள் மூடப்பட்டன.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161